# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## முற்பாதுகாப்பு வழிமுறைகள்

**இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் உற்பத்திப்பொருட்கள் மீதான முற்பாதுகாப்பு வழிமுறைகளையிட்டு நுண்ணாய்வுகளை மேற்கொள்வதற்கும் அவற்றைப் பிரயோகிப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புடைய அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

---

*கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சரினால் 2017, நவெம்பர் மாதம் 25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2017, ஒற்றோபர் மாதம் 09 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **218 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 68.00** **தபாற் செலவு : ரூபா 20.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*ச.வ.-ஓ. 69/2016*

**இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் உற்பத்திப்பொருட்கள் மீதான முற்பாதுகாப்பு வழிமுறைகளையிட்டு நுண்ணாய்வுகளை மேற்கொள்வதற்கும் அவற்றைப் பிரயோகிப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புடைய அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*இலங்கை, 1947 ஆம் ஆண்டின் இறுப்பனவுகள் மற்றும் வர்த்தகம் மீதான பொது உடன்படிக்கைக்கு (இ.வ.பொ.உ. 1947) ஒப்பந்தம் செய்துகொள்ளும் ஆரம்பகால திறத்தவர்களுள் ஒன்றாக இருந்துள்ளதாதலாலும்:*

*இ.வ.பொ.உ. 1947 இன் வாசகத்தை அடிப்படையாகக் கொண்டதும், 1994 ஏப்பிறல் மாதத்தில் கைச்சாத்திடப்பட்டதுமான 1994 ஆம் ஆண்டின் இறுப்பனவு மற்றும் வர்த்தகம் மீதான பொது உடன்படிக்கை ஏனையவற்றுடன் (இ.வ.பொ.உ) முற்பாதுகாப்பு வழிமுறைகள் மீதான உடன்படிக்கையை உள்ளடக்கியிருக்கின்றதாதலாலும்:*

*இலங்கையினுள் இறக்குமதி செய்யப்படும் உற்பத்திப்பொருட்கள் மீதான முற்காப்பு வழிமுறைகள் மீதான உடன்படிக்கையின் அமுலாக்கத்திற்கென சட்டவாக்க ஏற்பாடுகளைச் செய்வது உசிதமானதாயிருக்கின்றதாதலாலும்:*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

**1.** இச்சட்டமானது, 2017 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமெனபதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய திகதியில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2-PL 010496 -475 (2017/09)

முற்பாதுகாப்பு வழிமுறைகளின் பிரயோகம்.

**2.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்படும் நுண்ணாய்வொன்றைப் பின்பற்றி (இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வர்த்தக பணிப்பாளர் தலைமையதிபதி, நுண்ணாய்வு செய்யப்படும் உற்பத்திப்பொருள், அதேபோன்ற அல்லது நேரடியாகப் போட்டி நிலையிலுள்ள உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யும் உள்ளூர் கைத்தொழிலுக்குப் பாரதூரமான ஊறுவிளைவிக்கின்ற அல்லது விளைவிப்பதாக அச்சுறுத்துகின்றவகையில் முற்றிலும் அல்லது உள்ளூர் உற்பத்திக்குச் சமானமான அத்தகைய அதிகரித்த தொகைகளிலும், அத்துடன் அத்தகைய நிலைமைகளின்கீழும் இறக்குமதி செய்யப்படுகின்றன எனவும் முற்பாதுகாப்பு வழிமுறைகளின் பிரயோகம் பொதுமக்களின் நலனுக்கானது எனவும் தீர்மானிக்குமிடத்து, இலங்கைக்குள் இறக்குமதிசெய்யப்படும் உற்பத்திப் பொருட்கள் மீது முற்பாதுகாப்பு வழிமுறைகள் பிரயோகிக்கப் படுதல் வேண்டும்.

(2) முற்பாதுகாப்பு வழிமுறைகளைப் பிரயோகித்தல், இடைநிறுத்தம் செய்தல் அல்லது மீளப்பெறுதல் அத்துடன் முற்பாதுகாப்பு வழிமுறைகளின் பிரயோகத்தினது காலப்பகுதியை திரிபுபடுத்துதல் அல்லது நீடித்தல் என்பன தொடர்பான ஏதேனும் முடிவுகள் (இதனகத்துப்பின்னர் "குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அமைச்சுக்களுக்கிடையிலான குழுவின் பொறுப்பாதல் வேண்டும்.

குழுவின் அமைப்பு.

**3.** (1) குழுவானது, (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டமைந்ததாதல் வேண்டும்-

(அ) அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், அவர் குழுவின் தவிசாளராதல் வேண்டும்;

(ஆ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(இ) கைத்தொழில் அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(ஈ) உள்நாட்டு வர்த்தகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(உ) கமத்தொழில் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(ஊ) வெளிநாட்டு அலுவல்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(எ) சுங்க பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது நியமத்தர்; அத்துடன்

(ஏ) இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரின் ஒரு நியமத்தர்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எதுஎவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் கீழ் அதனது கருத்திற்கெடுத்தலுக்கென சமர்ப்பிக்கப்படுகின்ற முன்மொழிவுகளின் தன்மையைக் கருத்திற்கொண்டும், தவிசாளர் அது பொருத்தமானதெனக் கருதுமிடத்தும், அவர் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) மற்றும் (இ) பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட உறுப்பினர்களுடனான கலந்தாலோசனையில், குழுவுக்கு இரண்டு வேறு உறுப்பினர்களுக்கு மேற்படாது தெரிந்தெடுக்கலாம்.

(3) குழுவின் தவிசாளர், சமூகமாக இருப்பின், அத்தகைய குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டும், அத்துடன் ஏதேனும் அத்தகைய கூட்டத்திற்கு தவிசாளர் சமூகம் தராவிடின், சமூகமாகவுள்ள உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்திற்கு தலைமை தாங்கவென சமூகமாகவுள்ள உறுப்பினர்களில் ஒருவரை பெயர் குறித்துநியமித்தல் வேண்டும்.

(4) குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண் நான்கு உறுப்பினர்களாதல் வேண்டும், அத்துடன் கூட்டங்களைக் கொண்டுநடாத்துவது மற்றும் அதனது அலுவல்களின் நடாத்துதல் தொடர்பிலான நடவடிமுறை அத்தகைய குழுவினால் ஒழுங்குபடுத்தப்படுதல் வேண்டும்.

பாரதூரமான ஊறு.

**4.** (1) இச்சட்டத்தின் நோக்கத்திற்கு, நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் அதிகரித்த இறக்குமதிகள் உள்ளூர்க் கைத்தொழிலொன்றுக்கு பாரதூரமான ஊறுக்கான அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளனவா அல்லது பாரதூரமான ஊறை ஏற்படுத்தியுள்ளனவா என்பது பற்றிய தீர்மானமொன்று, அத்தகைய உள்ளூர்க்கைத்தொழிலின்மீது தாக்கமொன்றைக் கொண்டிருக்கக்கூடிய யதார்த்தபூர்வமானதும் கணியப் படுத்தப்படற்பாலதுமான இயல்பினவான இயைபான எல்லா காரணிகளினதும்; அத்துடன் குறிப்பாக பின்வரும் -

(அ) முற்றுமுழுதான நியதிகளின்படியும் உள்ளூர் உற்பத்தியைப் போன்ற அல்லது நேரடியாக போட்டி நிலைமையிலுள்ள உற்பத்திப்பொருளுக்குச் சமானமாகவும் நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப் பொருளின் இறக்குமதிகளிலான அதிகரிப்பின் வீதம் மற்றும் தொகை;

(ஆ) நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் அதிகரித்த இறக்குமதிகளால் ஆட்கொள்ளப்பட்ட உள்ளூர்ச் சந்தையின் பங்கு;

(இ) உற்பத்தி, கொள்ளளவு, பயன்பாடு, பொருட்பட்டியல்கள், விற்பனைகள், விலைகள் (அதிகரித்த இறக்குமதிகள் இல்லாமையில் வேறுவகையாக உறப்பட்டிருக்கக்கூடிய உள்ளூர் விலைகளில் குறைவு அல்லது உள்ளூர் விலைகளில் அதிகரிப்பு இல்லாமை போன்ற). உற்பத்தித்திறன், இலாபங்கள் மற்றும் நட்டங்கள், முதலீடுகள் மீதான வருவாய்கள், பணப்பாய்ச்சல் மற்றும் தொழில் போன்ற இயைபான பொருளாதாரச் சுட்டிகளின் மாற்றங்களினால் சான்றுபடுத்தப்பட்ட அதுபோன்ற அல்லது நேரடியாக போட்டி நிலைமையிலுள்ள பொருளின் உள்ளூர்க் கைத்தொழில் மீதான விளைவாந்தன்மையினதான தாக்கம்; அத்துடன்

(ஈ) அதிகரித்த இறக்குமதிகளே அத்தகைய ஊறுக்குக் காரணமென ஏற்றிக்கூறப்படுதலாகாது எனினும், உள்ளூர் கைத்தொழிலுக்குப் பாரதூரமான ஊறை

விளைவிக்கின்றதுமான அல்லது விளைவிப்பதாக அச்சுறுத்துகின்றதுமான நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் அதிகரித்த இறக்குமதிகளைத் தவிர, வேறு எவையேனும் இயைபான காரணிகள்,

காரணிகளினதும் மதிப்பீடொன்றை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பாரதூரமான ஊறிற்கான அச்சுறுத்தலின் அல்லது பாரதூரமான ஊறின் தீர்மானம், சம்பந்தப்பட்ட உற்பத்திப் பொருட்களின் அதிகரித்த இறக்குமதிகளுக்கும் பாரதூரமான ஊறு அல்லது ஊறின் சார்த்தப்பட்ட அச்சுறுத்தலுக்கும் இடையிலான காரணஞ்சார் தொடர்பொன்றின் உண்மையை தெளிவுபடுத்துகின்ற புறபொருள்சார் சான்றின் அடிப்படை மீதானதாக இருத்தல் வேண்டும்.

(3) அதிகரித்த இறக்குமதிகள் தவிர்ந்த காரணிகள் அதே நேரத்தில் கேள்வியிலுள்ள உள்ளூர் கைத்தொழிலுக்கு பாரதூரமான ஊறின் அச்சுறுத்தலை அல்லது பாரதூரமான ஊறினை ஏற்படுத்துகின்றவிடத்து, அத்தகைய பாரதூரமான ஊறு அத்தகைய இறக்குமதிகளுக்கு ஏற்றிக்கூறப்படுதலாகாது. அத்தகைய விடயங்களில், பணிப்பாளர் தலைமையதிபதி அவசியமாயின், மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு அல்லது எதிரீட்டுத் தீர்வைக்கென முறைப்பாட்டை ஆற்றுப்படுத்தலாம்.

*பாரதூரமான ஊறு பற்றிய அச்சுறுத்தல்.*

**5.** நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் அதிகரித்த இறக்குமதிகளால் விளைவிக்கப்படும் பாரதூரமான ஓர் ஊறு பற்றிய தீர்மானமொன்று, உள்ளவாறான நிகழ்வுகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தீர்மானமொன்றைச் செய்கையில், 4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காரணிகளுக்கு மேலதிகமாக, பின்வருவனவும் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்:-

(அ) நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருள், உற்பத்தி செய்யப்பட்ட அல்லது தோன்றிய நாட்டின் அல்லது நாடுகளின் உள்ளவாறானதும் வாய்ப்புள்ளதுமான ஏற்றுமதிக் கொள்ளளவு;

(ஆ) ஏற்றுமதி நாட்டில் அல்லது நாடுகளில் பொருட் பட்டியல்களின் அபிவிருத்தி;

(இ) நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் ஏற்றுமதிகள் அதிகரித்த தொகைகளில் உள்ளூர்ச் சந்தையிற் பிரவேசிக்கும் சாத்தியக்கூறுகள்; அத்துடன்

(ஈ) பணிப்பாளர் தலைமையதிபதியால் இயைபானவை எனக் கருதப்படும் வேறு எவையேனும் காரணிகள்.

எழுத்திலான விண்ணப்பத்தின் தேவைப்பாடு.

**6.** நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் அதிகரித்த இறக்குமதிகள் உள்ளூர்க் கைத்தொழிலொன்றுக்குப் பாரதூரமான ஊறைவிளைவிக்கின்றதா அல்லது விளைவிப்பதாக அச்சுறுத்துகின்றதா என்பதைத் தீர்மானிப்பதற்கான நுண்ணாய்வொன்று–

(அ) உள்ளூர்க் கைத்தொழிலொன்றினால் அல்லது அதன் சார்பில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு எழுத்திலான விண்ணப்பமொன்று செய்யப்படுவதன் மீது;

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதியால் தாமாகவே,

தொடக்கிவைக்கப்படுதல் வேண்டும்.

விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப் பட்ட தகவல்.

**7.** (1) ஆறாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் செய்யப்படும் விண்ணப்பமொன்று பின்வரும் விடயங்கள்மீது விண்ணப்பதாரர் நியாயமாகக் கொண்டிருக்கக்கூடியவாறான அத்தகைய தகவலைக் கொடுத்தல் வேண்டும்:-

(அ) இறக்குமதிசெய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் தொழில்நுட்பக் குணாதிசயங்களும் பயன்பாடுகளும் உட்பட அதன் முழுமையான விவரணமொன்றும் அத்துடன் அதன் இறுப்பனவு வகுப்பாக்கத்தின் இனம் காணலொன்றும் அத்தகைய உற்பத்திப்பொருளுக்கு ஏற்புடைத்தான தீர்வைகளும்;

(ஆ) அத்தகைய உற்பத்திப்பொருட்களைப் போன்ற அல்லது அவற்றிற்கு நேரடியாகப் போட்டி நிலையிலுள்ள உள்ளூர் உற்பத்திப்பொருட்களின் தொழில் நுட்பக் குணாதிசயங்களும் பயன்பாடுகளும் உட்பட அவற்றின் முழுமையான விவரணமொன்று;

(இ) விண்ணப்பத்தைச் செய்கின்ற தொழில் முயற்சிகளின் அல்லது எந்தத் தொழில் முயற்சிகளின் சார்பில் விண்ணப்பம் செய்யப்படுகின்றதோ அந்தத் தொழில் முயற்சிகளின் (இதனகத்துப்பின்னர் ("வேண்டுகோள் விடுக்கும் தொழில் முயற்சிகள்") எனக் குறிப்பீடு செய்யப்படும்) பெயர்களும் முகவரிகளும் அத்துடன் அதேபோன்ற அல்லது அதற்கு நேரடியாகப் போட்டி நிலையிலுள்ள உள்ளூர் உற்பத்திப்பொருட்களின் அறியப்பட்ட வேறு எல்லா உற்பத்தியாளர்களினதும் பெயர்களும் முகவரிகளும்;

(ஈ) வேண்டுகோள் விடுக்கும் தொழில் முயற்சிகளால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அதேபோன்ற அல்லது அவற்றிற்கு நேரடியாகப் போட்டி நிலையிலுள்ள உற்பத்திப்பொருட்களின் உள்ளூர் உற்பத்தியின் நூற்றுவீதம்;

(உ) உற்பத்தி நாட்டினால் விண்ணப்பம் செய்யப்பட்ட தேதிக்கு முற்போந்த மூன்று பஞ்சாங்க ஆண்டுகள் ஒவ்வொன்றிலும் இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களின் தொகையும் பெறுமதியையும் பற்றிய தகவலும் வேறு ஏதேனும் அண்மைய தகவலும்;

(ஊ) இறக்குமதிகளிலான அதிகரிப்பின் விவரணமொன்றும், அத்துடன் குறிப்பாக அத்தகைய அதிகரிப்பு உள்ளூர் உற்பத்திக்கு முற்றுமுழுதானதா அல்லது சமானமானதா அல்லது இரண்டுமா என்பது;

(எ) விண்ணப்பம் செய்யப்படும் தேதிக்கு முற்போந்த மூன்று பஞ்சாங்க ஆண்டுகள் ஒவ்வொன்றிற்கும் உள்ளூர்க் கைத்தொழிலுக்குப் பாரதூரமான ஊறு அல்லது பாரதூரமான ஊறுக்கான அச்சுறுத்துதல் தொடர்பான தகவலும் அத்துடன் பின்வருவன உட்பட வேறு ஏதேனும் அண்மைய தரவும்:-

(i) பாரதூரமான ஊறு தொடர்பில் -

(அ) உள்ளூர் உற்பத்திப்பொருளின் தொகையும் பெறுமதியும்;

(ஆ) உற்பத்தி ஆற்றலின் பயன்பாடு;

(இ) பொருட்பட்டியல் மட்டங்களிலான மாற்றங்கள்;

(ஈ) சந்தைப் பங்கு;

(உ) விற்பனை மட்டங்களிலான மாற்றங்கள்;

(ஊ) உள்ளூர்க் கைத்தொழிலில் தொழில் வாய்ப்புகளினதும் வேதனங்களினதும் மட்டம்;

(எ) விலை மட்டங்களிலான மாற்றங்கள்;

(ஏ) உற்பத்தித் திறன்;

(ஐ) இலாப, நட்டம்;

(ஒ) முதலீட்டின் மீதான வருவாய்;

(ஓ) பணப்பாய்ச்சல்; அத்துடன்

(ஔ) பாரதூரமான ஊறு ஒன்றுள்ளமையைத் தொடர்புறுத்தக்கூடிய வேறு ஏதேனும் தகவல்;

(ii) பாரதூரமான ஊறு பற்றிய அச்சுறுத்தல் தொடர்பாக -

(அ) ஏற்றுமதி செய்யும் நாடுகளில் ஏற்றுமதிக் கொள்ளளவு;

(ஆ) இலங்கையிலும் ஏற்றுமதி செய்யும் நாடுகளிலுமுள்ள இறக்குமதிசெய்யப் பட்ட உற்பத்திப்பொருள் தொடர்பிலான பொருட்பட்டியல்கள்; அத்துடன்

(இ) மூன்றாம் நாட்டுச் சந்தைகளுக்கான ஏற்றுமதிகள் மீதான வர்த்தக மட்டுப்பாடுகள் உட்பட ஏற்றுமதிகளிலான அதிகரிப்பின் சாத்தியக்கூறு தொடர்பான தகவல்;

(ஏ) விண்ணப்பத்தில் அடங்கியுள்ள தகவல்களினதும் இச்சட்டத்தின் கீழான தேவைப்பாடுகளினதும் அடிப்படையில், பாரதூரமான ஊறு அல்லது அதன் அச்சுறுத்துதல் உள்ளதாக ஏன் நம்பப்படுகின்றது என்பதற்கும் அதிகரித்த இறக்குமதிகளினால் அது விளைவிக்கப்படுவதற்குமான காரணங்கள் பற்றிய விளக்கமொன்று;

(ஐ) முற்பாதுகாப்பு வழிமுறையின் பிரயோகத்தைக் கோருவதற்கு, வளங்களை மேலும் உற்பத்தித்திறன் கொண்ட பயன்பாடுகளுக்கு ஒழுங்காக மாற்றுவதற்கு வசதியளித்தல், போட்டி நிலைமையை மேம்படுத்துதல் அல்லது போட்டி நிலைமையின் புதிய நிபந்தனைகளைக் கையாளுதல் போன்ற குறித்துரைக்கப்பட்ட காரணங்களையும் நாடப்பட்ட குறிக்கோள்கள் எய்தப் படுவதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானதெனக் கருதப்படும் வழிமுறையின் வகை மற்றும் மட்டம் என்பவற்றுடன் சேர்த்து தரப்படும் கூற்றொன்று;

(ஒ) பந்தி (ஐ) இல் குறிப்பீடு செய்யப்படும் குறிக்கோள்களுக்கிணங்க இறக்குமதிகளிலிருந்துவரும் போட்டிக்கு உள்ளூர்க் கைத்தொழிலை சீராக்குவதற்கான திட்டமொன்று; அத்துடன்

(ஓ) தற்காலிக வழிமுறையொன்று கோரப்படின், நடவடிக்கை எடுப்பதிலான தாமதமானது சீராக்குவதை சிரமமாக்கும் சேதத்தினை கைத்தொழிலுக்கு விளைவிக்கும் இக்கட்டான சூழ்நிலைகள் தொடர்பான தகவலும் தற்காலிக வழிமுறையொன்றாக இறுப்பனவு அதிகரிப்பின் மட்டத்தைக் காட்டும் கூற்றொன்றும்.

(2) ஆறாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் செய்யப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணத்துடன் சேர்த்து பணிப்பாளர் தலைமையதிபதியால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினதான பிரதிகளுடன் சேர்த்து பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, அதற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்ட தகவலை வழங்குதல் மற்றும் அவற்றுக்கு ஏற்பாடு செய்தலில் அக்கறை கொண்டுள்ள திறத்தவர்களினால், குறிப்பாகச் சிறிய கம்பெனிகளினால், உறப்படும் எவையேனும் சிரமங்களை உரிய கணக்குக்கெடுத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகையவாறாக, விடயத்துக்கேற்ப, ஏதேனும் செயல்முறைக்குகந்த உதவியை வழங்குதலும் வேண்டும் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தகவலைச் சமர்ப்பிப்பதற்கான கால வெல்லையையும் அந்நோக்கத்திற்கென அமைத்துருவாக்கப்படும் மதியுரைச் சபையொன்றின் ஊடாக நீடிக்கலாம்.

(4) அமைச்சர், 6 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் செய்யப்படும் விண்ணப்பங்களின் உருவாக்கத்தில் விண்ணப்பதாரர்களுக்கு உதவும் நோக்கத்திற்கென மதியுரைச் சபையொன்றை அமைத்துருவாக்குதல் வேண்டும். அத்தகைய மதியுரைச் சபையொன்று தொடர்பான அமைப்பு, தாபிப்பு மற்றும் ஏனைய எல்லாக் கருமங்களும் அமைச்சரினால் விதித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

விண்ணப்பத்தை மீளப்பெறுதல்.

**8**. ஆறாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று நுண்ணாய்வு தொடங்குவதற்கு முன்னர் மீளப்பெறப்படலாம் என்பதுடன் அத்தகையவொரு விடயத்தில் அது செய்யப்பட்டிருக்கவில்லை எனக் கருதப்படுதலும் வேண்டும்.

விண்ணப்பமொன்று செய்யப்பட்ட விடத்து நுண்ணாய்வொன்றைத் தொடங்குவதற்கான முடிவு.

**9**. (1) ஆறாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றில் வழங்கப்பட்ட தகவலின் செம்மையையும் போதுமாந்தன்மையையும் பரிசீலனை செய்தபின்னர், அதிகாரிக்கப்பட்ட இறக்குமதிகளால் பாரதூரமான ஊறுக்கான அல்லது அதன் அச்சுறுத்தலுக்கான போதியளவு சான்று இருக்கின்றதென திருப்தியுறுவதன்பேரில், பணிப்பாளர் தலைமையதிபதி நுண்ணாய்வொன்றைத் தொடங்குதல் வேண்டும். நுண்ணாய்வொன்றைத் தொடங்குவதற்கான முடிவொன்றை எடுக்குமுன்னர், பணிப்பாளர் தலைமையதிபதி வேண்டுகோள் விடுக்கும் தொழில்முயற்சிகளிடமிருந்து உட்பட, அவசியமானதென அவர் கருதும் அத்தகைய மேலதிகத் தகவலைக் கோரலாம்.

(2) ஆறாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றிற்கு மறுமொழியாக பணிப்பாளர் தலைமையதிபதி நுண்ணாய்வொன்றைத் தொடங்குவதில்லை எனத் தீர்மானிக்குமிடத்து, அவர் விண்ணப்பம் செய்கின்ற, வேண்டுகோள் விடுக்கும் தொழில் முயற்சிக்கு அல்லது எந்தத் தொழில் முயற்சியின் சார்பில் விண்ணப்பம் செய்யப்படுகின்றதோ அந்த தொழில்முயற்சிக்கு நுண்ணாய்வைத் தொடங்காமைக்கான காரணங்களை அறிவித்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதியால் விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றுள்ளவிடத்து, அவர் விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்கள்கொண்ட காலப்பகுதியொன்றினுள் முற்பாதுகாப்பு நுண்ணாய்வொன்றைத் தொடங்குவதா இல்லையா என்பதனைப் பற்றிய முடிவொன்றை எடுக்குமாறு பொதுவில் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். விண்ணப்பம்

சிக்கலான பிரச்சினைகள் சம்பந்தப்பட்டதாயிருக்குமிடத்து அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி இப்பிரிவின் (1) ஆம் உட்பந்தியின்கீழ் மேலதிக தகவலைக் கோரியுள்ளவிடத்து, முடிவொன்றை எடுப்பதற்கான காலம் மேலும் பதினைந்து நாட்கள்கொண்ட காலப்பகுதியொன்றிற்கு நீடிக்கப்படலாம்.

*பணிப்பாளர் தலைமையதிபதி நுண்ணாய்வைத் தொடங்கலாம்.*

**10.** பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய நுண்ணாய்வு தொடங்கப்படுவதை நியாயப்படுத்துவதற்காக, நுண்ணாய்வு செய்யப்படும் உற்பத்திப்பொருளின் அதிகரித்த இறக்குமதியால் ஊறு ஏற்படுத்தப்படுகின்றது அல்லது ஏற்படுத்தப்படுவதற்கான அச்சுறுத்துதல் இருக்கின்றது என்பதற்குப் போதுமான சாட்சியம் அவருக்கிருக்குமிடத்து, அவர் தாமாகவே இச்சட்டத்தின்கீழ் நுண்ணாய்வொன்றைத் தொடங்கலாம்.

*நுண்ணாய்வொன்றைத் தொடங்குதல் தொடர்பிலான பகிரங்க அறிவித்தல்.*

**11.** (1) இச்சட்டத்தின்கீழ் நுண்ணாய்வொன்றைத் தொடங்குவதற்கான முடிவொன்று பணிப்பாளர் தலைமையதிபதியால் எடுக்கப்பட்டவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி உடனடியாக-

(அ) அத்தகைய நுண்ணாய்வைப்பற்றி வேண்டுகோள் விடுக்கும் தொழில்முயற்சிகளுக்கும், அக்கறைகொண்ட வேறு எல்லாத் திறத்தவர்களுக்கும், ஏற்றுமதி செய்யும் நாடுகளின் இயைபான பிரதிநிதிகளுக்கும் அறிவித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய முற்பாதுகாப்பு நுண்ணாய்வு தொடங்கப்படுதல் தொடர்பிலான அறிவித்தலொன்றை வர்த்தமானியிலும் இலங்கையில் பரவலாக விநியோகிக்கப்படும் ஏதேனும் பத்திரிகையிலும் மும்மொழியிலும் வெளியிடுதல் வேண்டும்.

(2) நுண்ணாய்வொன்றின் தொடக்கம் (1) ஆம் உட்பந்தியின் (ஆ) என்னும் பந்தியின் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) நுண்ணாய்வில் பங்குபற்ற விரும்பும் அக்கறைகொண்ட திறத்தவரொருவர் நுண்ணாய்வில் பங்குபற்றுவதற்கான தனது விருப்பத்தை நுண்ணாய்வு தொடங்கப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்கள்கொண்ட காலப்பகுதியொன்றினுள் பணிப் பாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும். தோதானதெனப் பணிப்பாளர் தலைமையதிபதி கருதுகின்ற விடத்து, இவ்வுட்பிரிவின்கீழ் பங்குபற்றுவதற்கான ஒப்படைப் பைச் செய்வதற்கென அனுமதிக்கப்பட்ட காலப்பகுதியின் பின்னர், அக்கறைகொண்ட திறத்தவரிடமிருந்து நுண்ணாய்வொன்றில் பங்குபற்றுவதற்கான வேண்டுகோள் எதனையும் ஏற்றுக்கொள்ள லாம்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின்கீழ் நுண்ணாய் வொன்று தொடங்கப்பட்ட பின்னர் உடனடியாக, குழுவுக்கு குழு வால் தாபிக்கப்பட்ட அத்தகைய தேவைப்பாடுகளுக்கு ஒத்திசை வாக அத்தகைய நுண்ணாய்வு பற்றி அறிவித்தல் வேண்டும்.

(5) ஆறாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் மீது, நுண்ணாய்வொன்றைச் செய் வதில்லை எனப் பணிப்பாளர் தலைமையதிபதியால் முடி வொன்று எடுக்கப்படுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி பின்வரும் தகவல் அடங்கிய அறிவித்தலொன்றை வர்த்தமானி யில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்:-

(அ) வேண்டுகோள் விடுக்கும் தொழில் முயற்சிகளின் அடையாளமும் எந்த உள்ளூர் உற்பத்திப்பொருட்கள் தொடர்பில் நுண்ணாய்வொன்று தொடங்கப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்படுகின்றதோ அந்த உள்ளூர் உற்பத்திப்பொருட்களும்;

(ஆ) எந்த இறக்குமதிசெய்யப்பட்ட உற்பத்திப்பொருள் பாரதூரமான ஊறை அல்லது அதன் அச்சுறுத் துதலை விளைவிப்பதாக சார்த்துரைக்கப்படுகின்றதோ அந்த இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் அடையாளங்காணல் ஒன்று; அத்துடன்

(இ) நுண்ணாய்வொன்றைத் தொடங்குவதில்லை என்ற முடிவொன்றிற்கான காரணங்கள்.

நுண்ணாய்வு தொடர்பிலான அறிவித்தலின் உள்ளடக்கங்கள்.

**12.** முற்பாதுகாப்பு நுண்ணாய்வொன்றின் தொடக்கம் தொடர்பாக 11 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் வெளியிடப்படவேண்டிய அறிவித்தல் பின்வரும் விடயம் பற்றிய போதுமானளவு தகவலைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) நுண்ணாய்வு செய்யப்படும் உற்பத்திப்பொருளின் தொழில்நுட்பக் குணாதிசயங்களும் பயன்பாடுகளும் உட்பட அதன் முழுமையான விவரணம் ஒன்றும் அத்துடன் அதன் இறுப்பனவு வகுப்பாக்கத்தின் இனம் காணலொன்றும் அத்தகைய உற்பத்திப்பொருளுக்கு ஏற்புடைத்தான தீர்வைகளும்;

(ஆ) அத்தகைய உற்பத்திப்பொருட்களின் தொழில்நுட்பக் குணாதிசயங்களும் பயன்பாடுகளும் உட்பட அதே போன்ற அல்லது அவற்றிற்கு நேரடியாகப் போட்டி நிலையிலுள்ள உள்ளூர் உற்பத்திப்பொருட்களின் முழுமையான விவரணமொன்று;

(இ) வேண்டுகோள் விடுக்கும் தொழில்முயற்சிகள் எவையுமிருப்பின், அவற்றினதும் அதேபோன்ற உள்ளூர் அல்லது நேரடியாக போட்டி நிலைமையிலுள்ள உற்பத்திப்பொருட்களின் அறியப்பட்ட வேறு எல்லா உற்பத்தியாளர்களினதும் பெயர்கள்;

(ஈ) நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளைத் தோற்றுவித்த நாடு அல்லது நாடுகள்;

(உ) நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருட்களின் இறக்குமதிகளின் அதிகரிப்பு அத்துடன் அத்தகைய

அதிகரித்த இறக்குமதிகளால் விளைவிக்கப்படும் பாரதூரமான ஊறு அல்லது அதன் அச்சுறுத்துதல் என்பன தொடர்பான சார்த்துரை எந்தத் தகவலை அடிப்படையாகக் கொண்டுள்ளனவோ அந்தத் தகவலின் பொழிப்பொன்று;

(ஊ) பணிப்பாளர் தலைமையதிபதியின் பெயர், முகவரி அத்துடன் தொலைபேசி இலக்கம்;

(எ) நுண்ணாய்வு தொடங்கப்பட்ட தேதி முற்பாதுகாப்பு நுண்ணாய்வின் தொடக்கம் தொடர்பான அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அதே தேதியாகும் என்ற கூற்றொன்று;

(ஏ) தற்காலிக வழிமுறையொன்றில் விண்ணப்பமொன்று கருத்திற்கொள்ளப்படுமா இல்லையா என்பது;

(ஐ) பின்வருவன உட்பட நுண்ணாய்வை நடாத்துவதற்கென உத்தேசிக்கப்பட்ட அட்டவணை

(i) நுண்ணாய்வில் பங்குபற்ற விரும்பும் அக்கறை கொண்ட திறத்தவர் எந்தத் தேதியன்று அல்லது எந்தத் தேதிக்கு முன்னர் அத்தகைய நிகழ்வைப் பற்றிப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் அறிவிக்கலாமோ அந்தத் திகதி;

(ii) தற்காலிக வழிமுறையின் பிரயோகம் கருத்திற் கொள்ளப்படுமிடத்து, எந்தத் தேதியன்று அல்லது அதற்கு முன் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு எழுத்திலான எவையேனும் வாதங்கள் அல்லது ஒப்படைப்புகள் அனுப்பப்படலாமோ அந்தத் தேதி;

(iii) வாய்மூலமான விசாரணையொன்று விரும்பப் படுமாயின் அதற்கு எந்தத் தேதியன்று அல்லது அதற்கு முன் கோரிக்கை விடுக்கப்படவேண்டுமோ அந்தத் தேதி; அத்துடன்

(iv) தற்காலிக முற்பாதுகாப்பு வழிமுறையொன்றின் பிரயோகத்தின் தீர்மானத்திற்கும், அத்துடன் இயைபானவிடத்து, பாரதூரமான ஊறு அல்லது அதன் அச்சுறுத்துதல் அத்துடன் விளைவுப்பயன் தொடர்பிலான தீர்மானத்திற் கும் முற்பாதுகாப்பு வழிமுறையொன்றின் பிரயோகம் தொடர்பிலான வேறு ஏதேனும் முடிவுக்குமென உத்தேசிக்கப்பட்ட தேதிகள்.

*நுண்ணாய்வின் கால எல்லை.*

**13.** (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, விசேட சூழ்நிலைகளிற் தவிர, இச்சட்டத்தின் கீழான நுண்ணாய் வொன்றை அது தொடங்கப்பட்ட ஆறு மாதங்களுக்குள் மேற் கொள்வது பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும். சூழ்நிலைகள் அவ்வாறு தேவைப்படுத்துமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய காலப்பகுதியை மேலும் இரண்டு மாதங்களுக்கு மேற்படாமல் நீடிக்கலாம்.

(2) இச்சட்டத்தின் கீழான ஏதேனும் நுண்ணாய்வில், ஏதேனும் தற்காலிக வழிமுறையின் பிரயோகம் பரிசீலனை செய்யப் படுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி நுண்ணாய்வு தொடங்கப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களை முந்தாமலும் தொண்ணூறு நாட்களைப் பிந்தாமலும் அத்தகைய தற்காலிக வழிமுறைகளின் பிரயோகம் தொடர்பாக முடிவொன்றை எடுத்தல் வேண்டும்.

**14**. நுண்ணாய்வொன்றை மேற்கொள்கையில், பணிப்பாளர் தலைமையதிபதி பங்குபற்றும் அக்கறைகொண்ட நுண்ணாய் விற்கான எல்லாத் திறத்தவர்களுக்கும் நுண்ணாய்வு செய்யப்படும் விடயங்கள் மீது தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பொன்றை வழங்குதல் வேண்டும் என்பதுடன், இதற்காக பணிப்பாளர் தலைமையதிபதி அத்திறத்தவர்களுக்கு- *அக்கறை கொண்ட திறத்தவர்கள் சாட்சியம் சமர்ப்பித்தல்.*

(அ) நுண்ணாய்வு தொடர்பிலான ஏதேனும் இயைபான தகவலைப் பெறுவதற்கு பணிப்பாளர் தலைமையதிபதியால் தொடுக்கப்படும் எவையேனும் கேள்விகளுக்கு அல்லது விடுக்கப்படும் வேண்டுகோள்களுக்கு சமர்ப் பணங்களையும் மறுமொழிகளையும் அளிப்பதற்கும் -

(ஆ) நுண்ணாய்வு செய்யப்படும் விடயம் தொடர்பாக அத்தகைய திறத்தவர்களின் கருத்துக்கள் உட்பட, அவர்களால் இயைபானதெனக் கருதப்படும் ஏதேனும் சாட்சியத்தைச் சமர்ப்பிப்பதற்கும்; அத்துடன்

(இ) முற்பாதுகாப்பு வழிமுறையின் பிரயோகம் பொது மக்களின் நலனுக்கானதாக இருக்குமா இல்லையா என்பதுபற்றித் தங்களது கருத்துக்களை வெளிப்படுத்து வதற்கு,

இரண்டு வாரங்களை விஞ்சாத கால அவகாசத்தை அனுமதித்தல் வேண்டும்.

**15**. (1) இச்சட்டத்தின்கீழ் நுண்ணாய்வொன்றை நடத்துகையில், பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய நுண்ணாய்வை நடத்தும் நோக்கத்திற்கு இயைபானதெனக் கருதப்படும் ஏதேனும் தகவலை எவரேனும் சுங்க அலுவலரிடமிருந்து, கம்பனி யிடமிருந்து, அனுப்புநரிடமிருந்து அல்லது வேறு பகிரங்க, தனியார் தொழில் முயற்சியிடமிருந்து கோரலாம் என்பதுடன், கோரப்பட்ட தகவலை பணிப்பாளர் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்திற்குள் வழங்குவது விடயத்திற்கேற்ப, அத்தகைய அலுவலரின், கம்பனியின், அனுப்புநரின் அல்லது தொழில்முயற்சியின் கடமையாதலும் வேண்டும். *குறித்தசில ஆட்களிடமிருந்து தகவலைக் கோருவதற்குப் பணிப்பாளர் தலைமையதி பதிக்குள்ள தத்துவம்.*

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, அவர் உசிதமானதெனக் கருதுமிடத்து, 14 ஆம் பிரிவின் கீழும் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழும் அவரால் பெறப்பட்ட தகவலை சரிபார்க்கலாம் அல்லது அதன் மீது மேலதிக விவரங்களைப் பெறலாம் என்பதுடன், அத்தகைய ஏதேனும் சரிபார்த்தல் மேற்கொள்ளப் படுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய சரிபார்த் தலின் காண்புகளை விவரிக்கும் அறிக்கையொன்றைத் தயாரித் தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அறிக்கை, பெறப்பட்ட இரகசிய தகவல் எதுவும் புறநீங்கலாக, 19 ஆம் பிரிவின்கீழ் பேணப்படும் பகிரங்கக் கோப்பில் வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) நுண்ணாய்வொன்றில் -

(அ) கேட்பு எதுவும் கோரப்படாவிடில், எவரேனும் பங்கு பற்றும் அக்கறையுடைய திறத்தவர், பாரதூரமான ஊறும் அல்லது அதன் அச்சுறுத்துதலும் விளைவுப் பயனும் தீர்மானிக்கப்படுவதற்கென உத்தேசிக்கப் பட்ட தேதிக்கு முன்னர் ஒன்றரை மாத காலப்பகுதி யொன்றுக்குப் பிந்தாமல், நுண்ணாய்வுக்கு இயை பானதென அது கருதும் ஏதேனும் விடயம் தொடர் பாக எழுத்திலான வாதங்களைச் சமர்ப்பிக்கலாம்; அல்லது

(ஆ) கேட்பொன்று நடாத்தப்படுமாயின் கேட்புக்கென நியமிக்கப்பட்ட தேதிக்கு முன் பத்து நாட்கள்கொண்ட காலப்பகுதியொன்றிற்குப் பிந்தாமல் எவரேனும் பங்குபற்றும் அக்கறை கொண்ட திறத்தவர் நுண் ணாய்வுக்கு இயைபானதென அது கருதும் ஏதேனும் விடயம் தொடர்பாக எழுத்திலான சமர்ப்பணங் களையும் தகவலையும் சமர்ப்பிக்கலாம்.

(4) பங்குபற்றும் அக்கறைகொண்ட ஒரு திறத்தவர் -

(அ) கேட்பு கோரப்படாதவிடத்து, எழுத்திலான வாதங் களைச் சமர்ப்பிப்பதற்கென அனுமதிக்கப்பட்ட காலப்பகுதி முடிவுற்றதன் பின்னர்; அல்லது

(ஆ) கேட்பொன்று நடத்தப்பட்டவிடத்து, அத்தகைய கேட்பினையடுத்து,

வேறு ஏதேனும் பங்குபற்றும் அக்கறைகொண்ட திறத்தவர்கள் எவற்றினதும் எழுத்திலான சமர்ப்பணங்களுக்காக மேலும் எவையேனும் எழுத்திலான மறுமொழிகளைச் சமர்ப்பிப்பதற்கு பத்து நாட்களை விஞ்சாத மேலும் ஒரு காலப்பகுதியைப் பெறுதல் வேண்டும் அல்லது விடயத்திற்கேற்ப கேட்பில் முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களுக்கும் தகவலுக்கும் மறுமொழியாக மேலும் எழுத்திலான வாதங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

இரகசியமான தன்மை.

**16.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி, இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் இரகசியமாகக் கருதப்படுதலுக்கு உரித்துள்ள தாகச் சமர்ப்பிக்கப்பட்ட எல்லாத் தகவல்களையும் அவ்வாறு இரகசியமானவையாக வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தகவல், அதனைச் சமர்ப்பிக்கின்ற திறத்தவரின் குறிப்பிட்ட அனுமதியின்றி வெளியிடப்படுதலுமாகாது.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின்கீழ் வெளிவிடு கையிலிருந்து பாதுகாக்கப்படுகின்ற அத்தகைய தகவலை வழங்கு கின்ற திறத்தவரினால் இரகசியமானதெனக் குறித்தளிக்கப்பட்ட எல்லாத் தகவலையும் இரகசியமாகக் கருதுதல் வேண்டும்.

(3) பின்வரும் வகையினவான தகவல்கள், (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் நோக்கத்துக்காக, அத்தகைய தகவலை வழங்குகின்ற ஆளினால் இரகசியமானதெனக் குறித்தளிக்கப் படின், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 5 (1) ஆம் பந்தியின் நியதிகளின்படி, இரகசியமாக வழங்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண் டும்:-

(அ) ஓர் உற்பத்திப்பொருளின் தன்மை, உற்பத்திச் செய்முறைகள், தொழிற்பாடுகள், உற்பத்திச்சாதனம், அல்லது பொறித்தொகுதி சம்பந்தமான தொழில் அல்லது வியாபார அந்தரங்கங்கள்;

(ஆ) பகிரங்கமானமுறையில் கிடைக்கக்கூடியதாகவிராதவொரு கம்பெனியின் நிதிநிலைமை சம்பந்தமான தகவல்; அத்துடன்

(இ) ஓர் உற்பத்திப்பொருளின் தயாரிப்பும் விற்பனையும் தொடர்பான ஆகுசெலவுகள், வாடிக்கையாளர்களை ஆளடையாளங்காணல், விற்பனைகள், பொருட்பட்டியல்கள், கப்பலேற்றுபொருட்கள், ஏதேனும் வருமானம், இலாபம், நட்டம் அல்லது செலவினம் என்பவற்றின் தொகை அல்லது மூலம் சம்பந்தமான தகவல்.

(4) நுண்ணாய்வொன்றுக்கான திறத்தவர் ஒருவர், இரகசியமாகக் கருதப்படுதலுக்கான வேண்டுகோளுக்கான காரணங்களுட்பட, குறித்தசில தகவல்கள் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படும் நேரத்தில், அதற்கென விடுக்கப்படும் வேண்டுகோளின்பேரில், அவருக்குக் கிடைக்கக்கூடியதாக்கப்படும் அத்தகைய தகவலுக்கான அவ்வாறு இரகசியமானதாக அந்தஸ்தை நாடலாம். பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய வேண்டுகோள்களைத் துரிதமாகக் கவனத்திற்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், இரகசியமானதாகக் கருதப்படுவதற்கான வேண்டுகோளுக்கு அதிகாரமளிக்க முடியாததென அவர் தீர்மானித்தால், தகவலைச் சமர்ப்பிக்கின்ற திறத்தவருக்கு அவ்வாறு அறிவித்தலும் வேண்டும்.

(5) நுண்ணாய்வொன்றுக்கான திறத்தவர்கள், எந்தத் தகவல் இரகசியமானதாகக் கருதப்படுவதற்கு நாடப்படுகின்றதோ அந்த எல்லா தகவல்களும் பற்றிய இரகசியஞ்சாரா சுருக்கங்களைக் கொடுத்துதவுதல் வேண்டும். இவை, இரகசியமான உரையில் வழங்கப்பட்ட எண்களைச் சுட்டிக்காட்டுதல் அல்லது உரையிலான அடையாளமிடப்பட்ட நீக்கிவிடுதல்கள் என்ற வடிவத்தில் இருக்க

லாம் என்பதுடன் இரகசியமாகச் சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் விடயப்பொருளினது நியாயமான விளங்கிக் கொள்ளுதலை அனுமதித்தலும் வேண்டும்.

(6) விதிவிலக்கான சூழ்நிலைகளில், எந்தத் தகவல் இரகசிய மானதாகக் கருதப்படுவதற்கு நாடப்படுகின்றதோ அந்தத் தகவல் சுருக்கப்படுவதற்கு இயன்றதல்லவெனத் திறத்தவர்கள் சுட்டிக் காட்டலாம். இவ்விடயத்தில், சுருக்கப்படுதல் ஏன் சாத்தியமற்ற தாகவுள்ளது என்பதற்கான காரணங்கள் பற்றிய கூற்றொன்றும் அத்தகைய திறத்தவர்களினால் வழங்கப்படுதல் வேண்டும்.

(7) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட இரகசியஞ்சாரா சுருக்கம் அவ்வுட்பிரிவின் தேவைப்பாடுகளைத் திருப்திசெய்யத் தவறுகின்றதெனப் பணிப்பாளர் தலைமையதிபதி கருத்துக் கொள்ளுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, இரகசியமான தாகக் கருதப்படுவதற்கான வேண்டுகோளுக்கு அதிகாரமளிக் கப்படுவதில்லை யெனத் தீர்மானிக்கலாம் என்பதுடன், அத்தகைய சந்தர்ப்பத்தில் தகவலை வழங்குபவர் தகவலைப் பகிரங்கமான தாக்குவதற்கு விரும்பாதவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய தகவலைப் புறக்கணித்தலும் வேண்டும்; அத்துடன் சம்பந்தப்பட்ட தகவலை, தகவல் சரியானதென பணிப்பாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு அது தெளிவுபடுத்தப்பட்டா லொழிய, அதனைச் சமர்ப்பித்த திறத்தவருக்குத் திருப்பிக் கொடுத்தலும் வேண்டும்.

எழுத்திலான வாதங்கள்.

**17.** (1) பங்குபற்றும் அக்கறைகொண்ட எல்லாத் திறத்தவர்களும் இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க பங்குபற்றும் அக்கறை கொண்ட வேறு திறத்தவர்களால் செய்யப்பட்ட எழுத்துமூலமான அல்லது வாய்மூலமான முன்வைப்புக்களுக்கான மறுமொழிகள் உட்பட சாட்சியத்தையும் எழுத்திலான வாதங்களையும் முற்பாதுகாப்பு வழிமுறையொன்றின் பிரயோகம் பொதுமக்களின் நன்மைக்கானதா இல்லையா என்பதனைப் பற்றிய கருத்துக்களையும் சமர்ப்பிப்ப தற்கான வாய்ப்பொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஏதேனும் தற்காலிக முற்பாதுகாப்பு வழிமுறையின் பிரயோகம் கருத்திற்கொள்ளப்படும் நுண்ணாய்வொன்றில்,

பங்குபற்றும் அக்கறைகொண்ட எவரேனும் திறத்தவர் தற்காலிக முற்பாதுகாப்பு வழிமுறையைத் தீர்மானிப்பதற்கென உத்தேசிக் கப்பட்ட தேதிக்கு முன்னர் பதினைந்து நாட்கள்கொண்ட காலப் பகுதியொன்றினுள் அத்தகைய தீர்மானத்தை எடுப்பதற்கு இயை பான ஏதேனும் விடயம் தொடர்பாக எழுத்திலான வாதங்களைச் சமர்ப்பிக்கலாம்.

கேட்புகள்.

**18.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி பங்குபற்றும் அக்கறை கொண்ட ஒரு திறத்தவரினால் விடுக்கப்பட்ட ஏதேனும் வேண்டு கோளின்பேரில், தற்காலிக வழிமுறையொன்றின் பிரயோகம் தொடர்பிலான தீர்மானம் 22 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப் பட்டதன் பின்னர் பதினைந்து நாட்கள்கொண்ட காலப்பகுதி யொன்றிற்குப் பிந்தாமல் அல்லது தற்காலிக வழிமுறையொன்றின் பிரயோகம் பரிசீலனை செய்யப்படாதவிடத்து, நுண்ணாய்வு தொடங்கப்பட்ட பின்னர் ஒன்றரை மாத காலப்பகுதியொன் றிற்குப் பிந்தாமல் கேட்புக்கான தேதியொன்றை நியமிக்கலாம்; இக்கேட்பின்போது எல்லா பங்குபற்றும் அக்கறைகொண்ட திறத்தவர்களும் தகவலையும் வாதங்களையும் வாய்மூலமாக முன்வைக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான கேட்பு, பாரதூரமான ஊறு அல்லது அதன் அச்சுறுத்துதல் அத்துடன் விளைவுப்பயன் தொடர்பான தீர்மானத்திற்கென உத்தேசிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் இரண்டு மாத காலப்பகுதியொன்றிற்குப் பிந்தாமல் நடைபெறுதல் வேண்டும்.

(3) கேட்பின்போது தோற்றவேண்டுமென உளக்கருதுகின்ற, பங்குபற்றும் அக்கறை கொண்ட திறத்தவர்கள், கேட்பில் தோன்றும் அவர்களது பிரதிநிதிகள் மற்றும் சாட்சிகளின் பெயர்களை கேட்புத் திகதிக்கு ஆகக்குறைந்தது ஒரு வாரம் முன்பதாக பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

(4) கேட்புகள், பணிப்பாளர் தலைமையதிபதியினால் தலைமை தாங்கப்படுதல் வேண்டும். அவர் இரகசியம் பேணப்படுவதை உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், பங்குபற்றும் அக்கறை கொண்ட எல்லாத் திறத்தவர்களும் அவர்களது கருத்துக்களை முன்வைப்பதற்கு சமமான வாய்ப்பொன்று இருப்பதை உறுதி செய்யும் முறையில் கேட்பினை ஒழுங்குசெய்தலும் வேண்டும்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி கேட்பு நடவடிக்கைகளின் பதிவேடு ஒன்றைப் பேணுதல் வேண்டும். இது, ஏதேனும் இரகசியத் தகவலைத் தவிர்த்து 19 ஆம் பிரிவின்கீழ் பேணப்படும் பகிரங்கக் கோப்பில் இடப்படுதலும் வேண்டும்.

*பகிரங்கக் கோப்பும் அதனைப் பார்வையிடுதலும்.*

**19.** (1) இச்சட்டத்தின்கீழ் நடாத்தப்படும் ஒவ்வொரு நுண்ணாய்வும் அல்லது மீளாய்வும் தொடர்பாகப் பகிரங்கக்கோப்பொன்றைப் பணிப்பாளர் தலைமையதிபதி நிர்ணயித்துப் பேணுதல் வேண்டும். 16 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பணிப்பாளர் தலைமையதிபதி, பின்வருவனவற்றைப் பகிரங்கக் கோப்பில் இடுதல் வேண்டும் –

(அ) நுண்ணாய்வு அல்லது மீளாய்வு தொடர்பான எல்லாப் பகிரங்க அறிவித்தல்களும்;

(ஆ) வினாக்கொத்துக்கள், வினாக்கொத்துக்களுக்கான மறுமொழிகள், அத்துடன் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படும் எழுத்திலான கடிதத் தொடர்புகள் உட்பட்ட எல்லா விடயங்களும்;

(இ) 15 ஆம் பிரிவின்கீழ் தயாரிக்கப்படும் எவையேனும் சரிபார்த்தல் அறிக்கைகளுட்பட, பணிப்பாளர் தலைமையதிபதியினால் விருத்திசெய்யப்படும் அல்லது பெறப்படும் வேறெல்லாத் தகவலும்; அத்துடன்

(ஈ) பகிரங்க வெளிப்படுத்தலுக்காகத் தோதானவையெனப் பணிப்பாளர் தலைமையதிபதி கருதுகின்ற வேறெவையேனும் ஆவணங்களும்.

(2) பகிரங்கக் கோப்பானது, நுண்ணாய்வு, மீளாய்வு மற்றும் விளைகின்ற ஏதேனும் நீதிமுறை மீளாய்வுக் காலப்பகுதி பூராகவும், பணிப்பாளர் தலைமையதிபதியின் அலுவலகத்தில் மீளாய்வுக்கும் பிரதியெடுத்தலுக்கும் பொது மக்களுக்குக் கிடைக்கக் கூடியதாக்கப்படுதல் வேண்டும்.

கிடைக்கக்கூடிய தாகவுள்ள தகவலின் மீது நம்பியிருத்தல்.

**20.** (1) நுண்ணாய்வொன்றின்போது எந்நேரத்திலும், அக்கறை கொண்டுள்ள எவரேனும் திறத்தவர்-

(அ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படும் காலத்தினுள் அவசியமான ஏதேனும் தகவல் பெற்றுக் கொள்ளப்படுவதனை மறுக்கின்றவிடத்து அல்லது அவசியமான ஏதேனும் தகவலை வேறுவகையில் வழங்காதவிடத்து; அல்லது

(ஆ) வேறுவகையாகக் குறிப்பிடத்தக்கமுறையில் நுண்ணாய்வைத் தடைசெய்யுமிடத்து,

பணிப்பாளர் தலைமையதிபதி, விண்ணப்பத்தில் அடங்கியுள்ள தகவலுட்பட, கிடைக்கக்கூடிய தகவலின் அடிப்படையின்மீது, (உறுதிப்படுத்துவதான அல்லது எதிர்மாறான) பூர்வாங்க அத்துடன் இறுதித் தீர்மானத்தைச் செய்யலாம்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, அதற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்ட தகவலை வழங்குதல், அக்கறைகொண்டுள்ள திறத்தவர்களினால், குறிப்பாகச் சிறிய கம்பெனிகளினால், உறப்படும் எவையேனும் சிரமங்களை உரிய கணக்குக்கெடுத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகையவாறாக, விடயத்துக்கேற்ப, ஏதேனும் செயல்முறைக்குகந்த உதவியை வழங்குதலும் வேண்டும் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தகவலைச் சமர்ப்பிப்பதற்கான காலவெல்லையையும் நீடிக்கலாம்.

தற்காலிக முற்பாதுகாப்பு வழிமுறையொன்றைப் பிரயோகித்தல்.

**21.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி –

(அ) குறித்த சில இக்கட்டான சூழ்நிலைகள் நிலவுகின்றதெனவும் நடவடிக்கை எடுப்பதிலான தாமதமொன்று சீராக்குவதற்குச் சிரமமான சேதத்தை ஏற்படுத்தலாம் எனவும்; அத்துடன்

(ஆ) நுண்ணாய்வு செய்யப்படும் உற்பத்திப்பொருளின் அதிகரித்த இறக்குமதிகள் பாரதூரமான ஊறை விளைவிக்கின்ற அல்லது விளைவிப்பதாக அச்சுறுத்துகின்றன என தெளிவான சான்று உள்ளது,

எனத் தீர்மானிக்குமிடத்து, அவர் தற்காலிக முற்பாதுகாப்பு வழிமுறையொன்று பிரயோகத்திற்கு விதப்புரை செய்யலாம்.

(2) தற்காலிக முற்பாதுகாப்பு வழிமுறையொன்று நுண்ணாய்வு செய்யப்படும் உற்பத்திப்பொருள் இறக்குமதி செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படற்பாலதான தீர்வையொன்றின் வடிவத்தை எடுத்தல் வேண்டும். இத்தீர்வையானது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தீர்வைக்கு மேலதிகமானதாயிருத்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, தனது விதப்புரைகளை அமைச்சருக்கு சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், அவர் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு அதனை அனுப்புதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதியின் விதப்புரைகள் கிடைக்கப்பெற்றதன்மேல், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் அமைச்சருடனான கலந்தாலோசனையில், தற்காலிக முற்பாதுகாப்பு வழிமுறைகளை பிரயோகிப்பதா அல்லது இல்லையா எனவும் அத்துடன் தற்காலிக தீர்வைத்தொகை விதிக்கப்படவேண்டுமா எனவும் தீர்மானித்தல் வேண்டும்.

*தற்காலிக முற்பாதுகாப்பு வழிமுறை யொன்றின் பிரயோகம் பற்றிய அறிவித்தல்.*

**22.** (1) இருபத்தோராம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் தற்காலிக முற்பாதுகாப்பு வழிமுறையொன்றை பிரயோகிப்பதற்கு முடிவொன்று எடுக்கப்படுமிடத்து, அமைச்சர் அத்தகைய பிரயோகம் தொடர்பான அறிவித்தலொன்றை வர்த்தமானியிலும் இலங்கையில் பரவலாக விநியோகிக்கப்படும் ஏதேனும் செய்தித் தாளிலும் மும்மொழிகளிலும் பிரசுரிக்க பணிப்பாளர் தலைமை யதிபதியைப் பணித்தல் வேண்டும். அதில் பின்வரும் தகவல் அடங்குதல் வேண்டும்:-

(அ) நுண்ணாய்வு செய்யப்படும் உற்பத்திப்பொருளின் தொழில்நுட்பக் குணாதிசயங்களும் பயன்பாடுகளும் உட்பட அதன் முழுமையான விவரணமொன்றும், அதன் இறுப்பனவின் வகுப்பாக்கத்தையும் ஏற்புடையற்பாலன வான தீர்வைகளையும் அடையாளங்காணுதலும்;

(ஆ) அதேபோன்ற அல்லது அதற்கு நேரடிப் போட்டி நிலைமையிலுள்ள உள்ளூர் உற்பத்திப்பொருட்களில் தொழில்நுட்பக் குணாதிசயங்களும் பயன்பாடுகளும் உட்பட அவற்றின் முழுமையான விவரணமொன்றும்;

(இ) அதேபோன்ற அல்லது நேரடிப் போட்டி நிலைமையிலுள்ள உள்ளூர் உற்பத்திப்பொருட்களின் அறியப்பட்ட எல்லா உற்பத்தியாளர்களினதும் பெயர்கள்;

(ஈ) நுண்ணாய்வு செய்யப்படும் உற்பத்திப்பொருளின் உற்பத்தி நாடு அல்லது நாடுகள்;

(உ) தற்காலிக வழிமுறையொன்றின் பிரயோகத்திலான தாமதம் சீராக்குவதனைச் சிரமமாக்கும் சேதத்தை ஏற்படுத்தக்கூடியதாயிருக்குமிடத்து, குறித்தசில இக்கட்டான சூழ்நிலைகள் நிலவுகின்றன என்ற தீர்மானத்திற்கான அடிப்படை;

(ஊ) நுண்ணாய்வு செய்யப்படும் உற்பத்திப்பொருளின் அதிகரித்த இறக்குமதிகள் பாரதூரமான ஊறை விளைவித்துள்ளன அல்லது விளைவிப்பதாக அச்சுறுத்துகின்றன என்பதற்கான தெளிவான சான்று நிலவுகின்ற என்ற தீர்மானத்திற்கான அடிப்படை;

(எ) தற்காலிக முற்பாதுகாப்பு வழிமுறையொன்றாக உத்தேசிக்கப்படும் தீர்வை அதிகரிப்புத் தொகை; அத்துடன்

(ஏ) தற்காலிக முற்பாதுகாப்பு வழிமுறையின் பிரயோகத்தின் முன்னனப்பட்ட கால எல்லை.

(2) தற்காலிக முற்பாதுகாப்பு வழிமுறையொன்றின் பிரயோகத்திற்கெதிராக முடிபொன்று எடுக்கப்படுமிடத்து, அமைச்சர் அது தொடர்பான அறிவித்தல் வர்த்தமானியிலும் இலங்கையில் பரவலாக விநியோகிக்கப்படும் ஏதேனும் செய்தித்தாளிலும் மும்மொழிகளிலும் பிரசுரிக்கப் பணித்தல் வேண்டும். இதில் பின்வரும் தகவல் அடங்குதல் வேண்டும்:-

(அ) நுண்ணாய்வு செய்யப்படும் உற்பத்திப்பொருளின் தொழில்நுட்பக் குணாதிசயங்களும் பயன்பாடுகளும் உட்பட அதன் முழுமையான விவரணமொன்றும் அதன் இறுப்பனவும் வகுப்பாக்கத்தின் இனம் காணலொன்றும் ஏற்புடைத்தான தீர்வைகளும்;

(ஆ) அதேபோன்ற அல்லது அதற்கு நேரடி போட்டி நிலைமையிலுள்ள உள்ளூர் உற்பத்திப்பொருளின் இனம்காணலொன்று;

(இ) தற்காலிக முற்பாதுகாப்பு வழிமுறையொன்றின் பிரயோகத்திற்கெதிரான முடிவொன்றை எடுப்பதற்கான காரணங்களின் விளக்கமொன்று; அத்துடன்

(ஈ) நுண்ணாய்வு, அந்த இடத்தில் முடிவுறுத்தப்படுமா அல்லது இறுதிவரை தொடருமா என்பதனைப் பற்றிய கூற்றொன்று.

தற்காலிக முற்பாதுகாப்பு வழிமுறையின் கால எல்லை.

**23.** தற்காலிக முற்பாதுகாப்பு வழிமுறையொன்று பொதுவில் இருநூறு நாட்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்குப் பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அந்தக் காலப்பகுதி முடிவுறுவதற்கு முன்னர் அமைச்சருடனான கலந்தாலோசனையில் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் இடைநிறுத்தவும்படலாம்.

தற்காலிக முற்பாதுகப்பு வழிமுறை யொன்றுக்கான கட்டணமும் மீளளிப்பும்.

**24.** (1) தற்காலிக முற்பாதுகாப்பு வழிமுறையொன்றிற்கான தொகை சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியின் பெயரில் காசோலையொன்றாகவோ அல்லது பணக்கொடுப்பனவொன்றாகவோ சேகரிக்கவும் செலுத்தப்படவேண்டும் அல்லது சுங்க பணிப்பாளர் தலைமையதிபதியின் சார்பில் முறி அல்லது வைப்பீடு ஒன்றைக் கொடுத்துதவுவதன் மூலம் உத்தரவாதமளிக்கப்படுதல் வேண்டும்.

(2) அடுத்துறும் நுண்ணாய்வின் விளைவாக, அதிகரித்த இறக்குமதிகள் உள்ளூர் கைத்தொழிலுக்குப் பாரதூரமான ஊறை அல்லது அதனை ஏற்படுத்துவதற்கான அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது என்ற தீர்மானமொன்று எடுக்கப்படாவிடில், தற்காலிக முற்பாதுகாப்பு வழிமுறையொன்றாக திரட்டப்பட்ட ஏதேனும் தொகை மீளளிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் முறி அல்லது வைப்பீடு உடனடியாக விடுவிக்கப்படுதலும் வேண்டும்.

(3) சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி தற்காலிக முற்பாதுகாப்பு வழிமுறைத் தொகையின் மதிப்பீட்டிற்கும் திரட்டுதலுக்கும்பொறுப்புடையவராதல் வேண்டும் என்பதுடன், தீர்வைகளைத் திரட்டுதல் தொடர்பில் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் இதற்கும் இது தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

பாரதூரமான ஊறையும் பாரதூரமான ஊறுக்கான அச்சுறுத்துதலையும் விளைவுப் பயனையும் தீர்மானித்தல்.

**25.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின் 4 ஆம், 5 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கிணங்கவும் நுண்ணாய்வில் வெளிப்படுத்தப்பட்ட தகவலின் அடிப்படையிலும், நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் அதிகரித்த இறக்குமதிகள் உள்ளூர்க் கைத்தொழிலுக்குப் பாரதூரமான ஊறை ஏற்படுத்தியுள்ளதா அல்லது அதனை ஏற்படுத்துவதாக அச்சுறுத்துகின்றதா எனத் தீர்மானித்தல் வேண்டும்.

(2) நுண்ணாய்வொன்றின் முடிவில், பணிப்பாளர் தலைமையதிபதி பின்வருவன அடங்கிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டும்:-

(அ) நிகழ்வையும் சட்டத்தையும் பற்றிய இயைபான எல்லாப் பிரச்சினைகளையும் பற்றி கிடைக்கப்பெற்ற காண்புகளும் முடிபுகளும் உட்பட இறுதித் தீர்மானம்; அத்துடன்

(ஆ) நுண்ணாய்வில் வெளிப்படுத்தப்பட்ட எல்லாத் தகவலினதும் விரிவான பகுப்பாய்வொன்றும் பணிப்பாளர் தலைமையதிபதியால் பரிசீலனை செய்யப்பட்ட பிரச்சினைகளினதும் காரணிகளினதும் இயைபு.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழான அறிக்கையைத் தயாரிக்கையில், இரகசியத் தகவலைப் பாதுகாப்பதற்கான தேவைப்பாட்டிற்கு உரிய கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

**26.** பணிப்பாளர் தலைமையதிபதி பாரதூரமான ஊறும் அல்லது அதன் அச்சுறுத்துதலும் விளைவுப் பயனும் தொடர்பாக எதிர்மறையாகவாயினுஞ்சரி ஒப்புதலாகவாயினுஞ்சரி தீர்மான மொன்றை எடுத்ததன் மீது உடனடியாக, பாரதூரமான ஊறும் அல்லது அதன் அச்சுறுத்துதலும் விளைவுப் பயனும் தெடர்பான தீர்மானத்தைப் பற்றியதும் பின்வருவனவற்றை உள்ளடக்கியதுமான அறிவித்தலொன்றை வர்த்தமானியிலும் இலங்கையில் பரவலாக விநியோகிக்கப்படும் ஏதேனும் செய்தித்தாளிலும் மும்மொழி களிலும் பிரசுரிக்கச் செய்வித்தல் வேண்டும்:-

பாரதூரமான ஊறு பாரதூரமான ஊறுக்கான அச்சுறுத்துதல் மற்றும் விளைவுப் பயன் என்பன பற்றிய தீர்மானம் தொடர்பான பகிரங்க அறிவித்தலும் அறிவிப்பும்.

(அ) நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் தொழில்நுட்பக் குணாதிசயங்களும் பயன்பாடுகளும் உட்பட அதன் முழுமையான விவரணமொன்றும் அதன் இறுப்பனவு வகுப்பாக்கத்தின் இனம் காணலொன்றும் ஏற்புடைத்தான தீர்வைகளும்;

(ஆ) அதேபோன்ற அல்லது நேரடியாகப் போட்டி நிலைமை யிலுள்ள உள்ளூர் உற்பத்திப்பொருட்களின் தொழில் நுட்ப வியல் குணாதிசயங்களும் பயன்பாடுகளும் உட்பட அவற்றின் முழுமையான விவரணமொன்று;

(இ) அதேபோன்ற அல்லது நேரடியாகப் போட்டி நிலைமை யிலுள்ள உள்ளூர் உற்பத்திப்பொருட்களின் அறியப் பட்ட எல்லா உற்பத்தியாளர்களினதும் பெயர்கள்;

(ஈ) நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் உற்பத்தி நாடு அல்லது நாடுகள்; அத்துடன்

(உ) நுண்ணாய்வில் வெளிப்படுத்தப்பட்ட தகவலினதும் பரிசீலனை செய்யப்பட்ட காரணிகளினதும் அவற்றின் இயைபினதும் நிகழ்வினதும் சட்டத்தினதும் இயைபான பிரச்சினைகள் மீதான காண்புகளினதும் எடுக்கப்பட்ட முடிவுகளினதும் அவற்றிற்கான காரணிகளினதும் பொழிப்பொன்று.

**27**. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, தீர்க்கமான முற்பாது காப்பு வழிமுறையொன்றின் பிரயோகத்தின்மீது பணிப்பாளர் தலைமையதிபதியின் விதப்புரைகளுடன் சேர்த்து, குழுவுக்கு 25 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும். தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறைகள் பற்றிய பொதுக் கோட்பாடு.

(2) குழுவானது, (1) ஆம் உட்பிரிவின் குறிப்பீடு செய்யப்படும் ஆவணங்கள் கிடைக்கப்பெற்றதிலிருந்து பத்து வேலை நாட்கள் கொண்ட காலப்பகுதியொன்றினுள் -

(அ) எதிர்பாரா நிகழ்வுகளின் விளைவொன்றாக, அதிகரித்த இறக்குமதிகள் உள்ளூர் கைத்தொழிலுக்கு பாரதூர மான ஊறைவிளைவித்துள்ள அல்லது விளைவிப்ப தாக அச்சுறுத்துகின்றன எனவும்; அத்துடன்

(ஆ) வரையறுக்கப்பட்ட முற்பாதுகாப்பு வழிமுறையொன்றின் பிரயோகம் பொதுமக்களின் நலனுக்கானதாகும் எனவும்,

தீர்மானிக்குமிடத்து, குழுவானது, தீர்க்கமான முற்பாதுகாப்பு வழி முறையொன்றின் பிரயோகத்தை அமைச்சர் ஊடாக நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு விதப்புரை செய்தல் வேண்டும்.

(3) தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையொன்றின் பிரயோக கால எல்லையும் மட்டமும் பாரதூரமான ஊறைத் தடுப்பதற்கும் அல்லது திருத்துவதற்கும் அத்துடன் சீராக்கங்களுக்கு வசதியளிப் பதற்கும் அவசியமானதைவிடக் கூடுதலாயிருத்தலாகாது.

**28**. குழுவானது தீர்க்கமான முற்பாதுகாப்பு முறையொன்றின் விதித்தலை விதப்புரை செய்யுமிடத்து, அமைச்சருடனான கலந்தாலோசனையில் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர், குழுவின் விதப்புரை கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து பதினான்கு வேலைநாட்கள்கொண்ட காலப்பகுதியினுள் தேசிய பொருளாதாரத்தின் நலன்களை கருத்திற்கெடுத்து, அத்தகைய முற்பாதுகாப்பு வழிமுறையை கடைப்பிடிப்பதா இல்லையா எனத் தீர்மானித்தல் வேண்டும். தீர்மான முற்பாதுகாப்பு வழிமுறையைக் கடைப் பிடித்தலை அமைச்சர் தீர்மானித்தல்.

**தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையின் பிரயோகத்தைப் பதிவுசெய்தல் பற்றிய அறிவித்தல்.**

**29.** (1) தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையொன்றை பிரயோகிப்பதற்கான முடிவொன்று எடுக்கப்படுமிடத்து, வர்த்தமானியிலும் இலங்கையில் பரவலாக விநியோகிக்கப்படும் ஏதேனும் செய்தித் தாளிலும் மும்மொழிகளிலும் அறிவித்தலொன்றைப் பிரசுரித்தல் பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்; இதில் பின்வரும் தகவல் உள்ளடக்கப்படுதல் வேண்டும் :-

(அ) நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் தொழில்நுட்பக் குணாதிசயங்களும் பயன்பாடுகளும் உட்பட, அதன் முழுமையான விவரணமொன்றும் அதன் இறுப்பனவு வகுப்பாக்கத்தின் இனம் காணலொன்றும் ஏற்புடைத்தான தீர்வைகளும்;

(ஆ) அதேபோன்ற அல்லது நேரடியாகப் போட்டி நிலைமையிலுள்ள உள்ளூர் உற்பத்திப்பொருட்களின் தொழில்நுட்பக் குணாதிசயங்களும் பயன்பாடுகளும் உட்பட அவற்றின் முழுமையான விவரணமொன்று;

(இ) அதேபோன்ற அல்லது நேரடியாகப் போட்டி நிலைமையிலுள்ள உள்ளூர் உற்பத்திப்பொருட்களின் அறியப்பட்ட எல்லா உற்பத்தியாளர்களினதும் பெயர்கள்;

(ஈ) நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் உற்பத்தி நாடு அல்லது நாடுகள்; அத்துடன்

(உ) கருத்தில்கொள்ளப்பட்ட காரணிகளும் அவற்றின் இயைபும் உட்பட ஊறுபற்றிய ஒப்புதலளிக்கும் தீர்மானத்தினதும் அதன் இயைபினதும் காண்புகளினதும்முடிபுகளினதும்கருத்திற்கொள்ளப்பட்ட நிகழ்வு மற்றும் சட்டம் பற்றிய பிரச்சினைகள் மீது அதற்கான காரணங்களினதும்பொழிப்பொன்று அல்லது பாரதூரமான ஊறு அல்லது அதன் அச்சுறுத்துதல் அத்துடன் விளைவுப்பயன் என்பன தொடர்பான தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கான எதிரீட்டுக் குறிப்பொன்று;

(ஊ) பணிப்பாளர் தலைமையதிபதி தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையொன்றின் பிரயோகம் பொதுமக்களின் நலனுக்கானதாதலாகும் என்ற முடிவை எக்காரணங்கள்மீது எடுத்தாரோ அக்காரணங்கள்;

(எ) உள்ளூர்க் கைத்தொழிலின் சீராக்கத்திட்டம் தொடர்பான விவரங்கள்;

(ஏ) உத்தேசிக்கப்பட்ட தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையின் வடிவமும் மட்டமும் கால எல்லையும் அத்துடன் 27ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்றவாறு அதற்கான விளக்கமொன்றும்;

(ஐ) தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையின் பிரயோகத்தின் உத்தேசிக்கப்பட்ட தேதி;

(ஒ) கணிய மட்டுப்பாடொன்று உத்தேசிக்கப்படின், வழங்குநர் நாடுகளிடையே பங்கீட்டின் ஒதுக்கீடும் எந்த அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பது தொடர்பாக 31 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகும் வகையில் விளக்கமொன்றும் இயைபான தகவலும்;

(ஓ) வழிமுறையின் உத்தேசக் கால எல்லை (ஏதேனும் தற்காலிக முற்பாதுகாப்பு வழிமுறையின் பிரயோகத்தின் காலப்பகுதி உட்பட) ஓராண்டுக் காலப்பகுதிக்கும் கூடுதலாக இருக்குமாயின், வழிமுறையை முன்னேற்றகரமாக தாராளமயப்படுத்துவதற்கான நேர அட்டவணையொன்று; அத்துடன்

(ஔ) வழிமுறையிலிருந்து விலக்களிக்கப்பட்ட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் இணங்காணலொன்று.

(2) தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையொன்றின் பிரயோகத்திற்கு எதிராக முடிவொன்று எடுக்கப்படுமிடத்து, அத்தகைய முடிவை எடுப்பதற்கான உண்மை நிகழ்வு சார்ந்ததும்

சட்டரீதியிலானதுமான அடிப்படையைக் குறிப்பிடும் அறிவித்த லொன்றை வர்த்தமானியிலும் இலங்கையில் பரவலாக விநியோகிக் கப்படும் ஏதேனும் செய்தித்தாளிலும் மும்மொழியிலும் பிரசுரித்தல் பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.

தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறை யொன்றின் வடிவமும் பிரயோகமும்.

**30.** (1) தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையொன்று பொதுவில் ஒன்றில் இறுப்பனவு அதிகரிப்பு என்ற வகையில் அல்லது இறக்குமதிகள் மீதான அளவுசார்ந்த மட்டுப்பாடொன்று என்ற வகையில் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். என்பதுடன் 31 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் எல்லா இறக்குமதிகள் மீதும் அதன் மூலவளத்தையும் வழிமுறை பயனுக்குவந்த தேதிக்கு முன்னர் பதியப்பட்டதா பின்னர் பதியப்பட்டதா என்பதனையும் பொருட் படுத்தாமல் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(2) தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையொன்று இறுப்பனவு அதிகரிப்பு என்றவகையில் பிரயோகிக்கப்படுமிடத்து, அத்தகைய இறுப்பனவு அதிகரிப்பைத் திரட்டுவதற்கு சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி பொறுப்புடையவராதல் வேண்டும்; அதேவேளை கணிய கட்டுப்பாடு என்றவகையில் தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையொன்றின் நிர்வாகம் இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப் பாட்டதிகாரியின் பொறுப்பாதல் வேண்டும்.

குறித்தசில அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளுக்கு தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறை பிரயோகிக்கப் படாமை.

**31.** (1) இச்சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையொன்று, அபிவிருத்தியடைந்துவரும் நாட்டின் உறுப்பினர் ஒன்றில் உற்பத்தியாகும் நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் இறக்குமதிகள், நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் இலங்கையினுடைய மொத்த இறக்குமதிகளின் மூன்று சதவீதத்திற்கு மேற்படாதிருக்கும்வரை அத்தகைய இறக்குமதி களுக்குப் பிரயோகிக்கப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அபிவிருத்தியடைந்துவரும் நாட்டு உறுப்பினரிடமிருந்து செய்யப் படும் இறக்குமதிகள் தனித்தனியாக நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் இலங்கையினுடைய இறக்குமதிகளின்

மூன்று சதவீதத்திற்குக் குறைவாகவும், கூட்டாக நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் இலங்கையினுடைய இறக்குமதி களின் ஒன்பது சதவீத்திற்குக் கூடுதலாகவும் இருக்குமிடத்து, அந்த அபிவிருத்தியடைந்துவரும் நாட்டு உறுப்பினரிடமிருந்து செய்யப்படும் அத்தகைய இறக்குமதிகளுக்குத் தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையொன்று பிரயோகிக்கப்படலாம்.

தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையாகப் பங்கீடுகள்.

**32.** (1) நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் இறக்குமதிகள்மீது ஒரு பங்கீடு என்ற வகையிலான தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையொன்று, அந்த இறக்குமதிகளின் தொகையை எந்த மூன்று மிக அண்மைய ஆண்டுகளில் புள்ளி விபரங்கள் கிடைக்கக்கூடியதாக உள்ளனவோ அந்த மூன்று மிக அண்மைய ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்ட சராசரி மட்டத்திற் குக்கீழ் குறைத்தலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடு எவ்வாறிருப்பினும், பாரதூர மான ஊறின் அச்சுறுத்துதலைத் தடுப்பதற்கு அல்லது திருத்து வதற்கு வேறொரு மட்டம் அவசியம் என்பதை நியாயப்படுத்து வதற்குப் போதியளவு காரணங்கள் இருக்குமிடத்து, அமைச்சரு டனான கலந்தாலோசனையில் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப் பொருளின் இறக்குமதிகளின் தொகையை, எந்த மூன்று மிக அண்மைய ஆண்டுகளில் புள்ளிவிபரங்கள் கிடைக்கக்கூடியதாக உள்ளனவோ அந்த மூன்று மிக அண்மைய ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட சராசரி மட்டத்தின்கீழ் குறைக்கின்ற பங்கீடொன்றைப் பிரயோகிக்கலாம்.

(3) ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகள் நுண்ணாய்வுசெய்யப்பட்ட உற்பத்திப்பொருளை இலங்கைக்கு ஏற்றுமதிசெய்யுமிடத்து, இறக்குமதிகள் மீதான ஏதேனும் பங்கீடு எல்லா வழங்கல் நாடு களுக்குமிடையே ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டமுறை பங்கீட்டின் ஒதுக்கீட்டிற்கு நியாயமாக செயல்முறைச் சாத்தியமற்றது என அமைச்சருடனான கலந்தாலோசனையில் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர்

தீர்மானிக்குமிடத்து, அவர் பங்கீட்டை நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளை வழங்குவதில் கணிசமான அக்கறை கொண்டுள்ள நாடுகளிடையே ஒதுக்கீடுசெய்தல் வேண்டும். ஒதுக்கீடானது முந்திய மூன்று ஆண்டுகளின்போது அத்தகைய நாடுகளால் வழங்கப்பட்ட நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப் பொருளின் விகிதாசாரத்தை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் ஒதுக்கீடு உரிய கணிப்பு நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளிலான வர்த்தகத்தைப் பாதித்திருக்கக்கூடிய அல்லது பாதித்துக் கொண் டிருக்கக்கூடிய எவையேனும் விசேட காரணிகள் தொடர்பில் எடுத்தல் வேண்டும்.

**33.** (1) தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையொன்று, அது 36ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் நீடிக்கப்பட்டாலன்றி, ஏதேனும் தற்காலிக வழிமுறையின் பிரயோகத்தின் காலப்பகுதி உட்பட நான்கு ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கென பிரயோகிக்கப்படுதல் வேண்டும். *தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறை யொன்றின் கால எல்லை.*

(2) தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையொன்றின் பிரயோகத்தினுடைய காலப்பகுதியின் மொத்த கால எல்லையானது, ஏதேனும் தற்காலிக வழிமுறையின் பிரயோகத்தின் காலப்பகுதியும், ஆரம்பப் பிரயோகத்தின் காலப்பகுதியும் 36 ஆம் பிரிவின்கீழ் அதன் நீடிப்பும் உட்பட பத்து ஆண்டுகள் காலப்பகுதியொன்றை விஞ்சுதலாகாது.

**34.** எந்தத் தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையொன்றின் பிரயோகத்தின் காலப்பகுதி, ஓராண்டு காலப்பகுதியொன்றை விஞ்சுகின்றதோ அந்தத் தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையானது 29 ஆம் பிரிவின்கீழ் தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையொன்றின் பிரயோகம் தொடர்பிலான பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்கிணங்க, அதன் பிரயோகத்தின் காலப்பகுதியின்போது கிரமமான இடைவெளிகளில் முன்னேற்றகரமாக தாராளமயப்படுத்துதல் வேண்டும். *முன்னேற்ற கரமான தாராளமயப் படுத்துதல்.*

**35.** (1) தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையொன்றின் பிரயோகத்தின் காலப்பகுதி (ஏதேனும் தற்காலிக வழிமுறையின் பிரயோகத்தின் காலப்பகுதி உட்பட) மூன்று ஆண்டுகளை விஞ்சுமிடத்து, வழிமுறையினுடைய பிரயோகத்தின் காலப்பகுதியின் நடுத்தவணைக்குப்பிந்தாமல் பணிப்பாளர் தலைமையதிபதி, *மீளாய்வு.*

சம்பந்தப்பட்ட உள்ளூர்க் கைத்தொழிலின்மீது தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையின் விளைவுகளையும் அதன் சீராக்கத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் கைத்தொழிலின் முன்னேற்றத்தையும் பற்றிய மீளாய்வொன்று உட்பட நிலைமையை மீளாய்வு செய்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 10 முதல் 19 வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள் அத்தகைய மீளாய்வு தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) மீளாய்வின் பெறுபேறுகள் பணிப்பாளர் தலைமையதிபதியால் தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அவர் தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையைப் பேணுவதா அல்லது மீளப்பெறுவதா அல்லது அதனைத் தாராளமயமாக்கும் வேகத்தை அதிகரிப்பதா என்பது பற்றி குழுவினது விதப்புரைகளைச் செய்வதற்கென அதற்கு அத்தகைய அறிக்கையை அதன் பின்னர் அனுப்புதல் வேண்டும்.

(4) மீளாய்வின் பெறுபேறுகளைப் பொழிப்பாக்கி தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையொன்றைப் பேணுவதற்கான, தாராளமயப்படுத்துவதற்கான அல்லது மீளப்பெறுவதற்கான அறிவித்தலொன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய அறிவித்தலின் உள்ளடக்கங்கள் 29 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையொன்றின் பிரயோகம் தொடர்பிலான அறிவித்தல் தொடர்பாக குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஒத்திசைதல் வேண்டும்.

*தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையை நீடித்தல்.*

**36.** (1) தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையை அதன் ஆரம்ப காலப்பகுதிக்கு அப்பால் பிரயோகிப்பதற்கான தொடர்ந்துறும் தேவையொன்றுள்ளது என உள்ளூர்க் கைத்தொழில் கருதுகின்றவிடத்து, அது, கைத்தொழிலின் சீராக்கத் திட்டத்திற்கான சான்று உட்பட வழிமுறையின் நீடிப்பிற்கு எழுத்திலான வேண்டுகோள் ஒன்றை அக்காலப்பகுதியின் முடிவுக்கு முன்னர் ஆறு மாத காலப்பகுதியொன்றிற்கு குறையாமல் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, நீடிப்புத் தேவையா என்ப தனைத் தீர்மானிப்பதற்குப் நுண்ணாய்வொன்றை நடாத்துதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய நுண்ணாய்வினதும் தீர்மானத் தினதும் நோக்கத்திற்காக ஆரம்ப வழிமுறையைப் பிரயோகிப் பதற்கு இச்சட்டத்தில் தரப்பட்டுள்ள நடவடிக்கைமுறைகள் ஏற்றமாற்றங்களுடன் பின்பற்றப்படுதல் வேண்டும்.

(3) முப்பத்துமூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, முற்பாது காப்பு வழிமுறையொன்று ஒருமுறை மாத்திரம் நீடிக்கப்படலாம்.

(4) தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையொன்று பாரதூர மான ஊறைத் தடுப்பதற்கு அல்லது திருத்துவதற்கு தொடர்ந்து அவசியமாயிருக்கின்றது எனவும், உள்ளூர்க் கைத்தொழில் சீராக்குகின்றது எனவும் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட நுண்ணாய்வொன்றின் ஊடாக பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானிக்குமிடத்து மாத்திரம், அவர் அம்முற்பாதுகாப்பு வழி முறையின் நீடிப்புக்கு விதப்புரை செய்யலாம்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி பத்து வேலைநாட்களுள் குழுவுக்கு தனது விதப்புரைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், குழுவானது, அவை கிடைக்கப்பெற்றதிலிருந்து பத்து வேலைநாட்கள் கொண்ட காலப்பகுதியொன்றினுள் பின்வருமாறு தீர்மானிக்குமிடத்து, தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறை யொன்றின் நீடிப்பை அமைச்சர் ஊடாக நிதி என்னும் விடயத் துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு விதப்புரை செய்யலாம் -

(அ) முற்பாதுகாப்பு வழிறைகள் ஊறைத் தடுப்பதற்கு அல்லது நிவாரமளிக்க அவசியமாகவுள்ளதாக தொடருகின்றது; அத்துடன்

(ஆ) உள்ளூர் கைத்தொழில் சீராக்குகின்றதென சான்று உள்ளது.

(6) குழுவானது, தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையொன் றின் நீடிப்பை விதப்புரை செய்யுமிடத்து, அமைச்சரு டனான கலந்தாலோசனையில் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான

அமைச்சர் குழுவின் விதப்புரை கிடைக்கப்பெற்றதிலிருந்து பதினான்கு வேலைநாட்கள் கொண்ட காலப்பகுதியொன்றினுள் தேசிய பொருளாதார நலனைக் கருத்திற்கெடுத்து, அத்தகைய முற்பாதுகாப்பு வழிமுறையை நீடிப்பதா அல்லவா எனத் தீர்மானித்தல் வேண்டும்.

(7) நீடித்த தீர்க்கமான முற்பாதுகாப்பு வழிமுறையொன்று பிரயோகத்தின் ஆரம்ப காலமுடிவில் இருந்ததைவிட மிகவும் கட்டுப்பாடுடையதாக இருத்தலாகாது.

(8) நீடித்த காலப்பகுதியொன்றின்போது, முற்பாதுகாப்பு வழிமுறையொன்று நீடிப்பதற்கு வெளியிடப்பட்ட அறிவித்தலொன்றுக்கு இணங்க முன்னேற்றகரமான தாராளமயமாக்கலாக இருப்பதாக முற்பாதுகாப்பு வழிமுறையொன்று தொடருதல் வேண்டும். அத்தகைய அறிவித்தல், 29ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்படும் தீர்க்கமான முற்பாதுகாப்பு முறையொன்றை பிரயோகிக்கின்ற அறிவித்தல் தொடர்பிலான தேவைப்பாடுகளுடன் ஏற்றமாற்றங்களுடன் ஒத்திசைவாதல் வேண்டும்.

இரகசிய தகவல் வெளியிடப் படுதலாகாது.

**37**. (1) இச்சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட நுண்ணாய்வொன்றின்போது அல்லது அதன் பின்னர் எவரேனும் ஆளினால் சேகரிக்கப்பட்டதும் 16 ஆம் பிரிவின்கீழ் இரகசிய தகவலாக கருதப்படுவதற்கு உரித்துடைதுமான தகவல், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வெளிவிடுமாறு தேவைப்படுத்தப் பட்டாலன்றி அல்லது அதிகாரமளிக்கப்பட்டாலன்றி, அத்தகைய ஆளினால் வெளிவிடப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக இதன்கண் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான ஏதேனும் இரகசிய தகவலை வெளிவிடுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

**38.** இச்சட்டத்தின்கீழ் நுண்ணாய்வொன்றில் அல்லது மீளாய்வு நடவடிக்கையில் பங்கேற்ற அல்லது அதில் அக்கறையொன்றைக் கொண்டிருந்த திறத்தவர் எவரும் அரசியலமைப்பின் 140 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி மீளாய்வொன்றை நாடலாம். *நீதித்துறை சார்ந்த மீளாய்வு.*

**39.** (1) பணிப்பாளர் தலைமயதிபதி இச்சட்டத்தின் கீழான அவரது பணிகள் மற்றும் கடமைகள் எவற்றையும் வாணிக பிரதிப்பணிப்பாளர் தரத்திற்குக் குறையாத எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம். *பணிப்பாளர் தலைமையதிபதியால் கையளிக்கப்படுதல்.*

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் பணி அல்லது தத்துவம் எந்த அலுவலருக்குக் கையளிக்கப்படுகின்றதோ அந்த அலுவலர் ஒருவர், பணிப்பாளர் தலைமையதிபதியால் வழங்கப்படக்கூடிய வாறான அத்தகைய பணிப்புகளுக்கமைய, அத்தகைய பணியை அல்லது தத்துவத்தை நிறைவேற்றுதல் அல்லது பிரயோகித்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட கையளிப்பு எவ்வாறிருப்பினும், பணிப்பாளர் தலைமையதிபதி அவ்வாறு கையளிக்கப்பட்ட ஏதேனும் பணியை அல்லது தத்துவத்தை நிறைவேற்றுவதற்கான அல்லது பிரயோகிப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**40.** (1) அமைச்சர் எந்தக் கருமம் விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற அல்லது எவ்வெல்லாக் கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அவ்வெல்லாக் கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். *ஒழுங்குவிதிகள்.*

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடை முறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்ட தாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப் படுதல் வேண்டும்.

**41**. இச்சட்டத்தின் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலன்றி — பொருள் கோடல்.

"நாடு" என்பது, உலக வர்த்தக ஒழுங்கமைப்பின் உறுப்பினர்கள் அல்லது வேறேதேனும் நாடுகள் அல்லது தன்னாட்சியான சுங்க ஆள்புலம் எனப் பொருள்படும்;

"நேரடியான போட்டிநிலைமையிலுள்ள உற்பத்திப்பொருள்" என்பது, நுண்ணாய்வுக்குட்பட்டுள்ள உற்பத்திப் பொருளை ஒத்த அல்லது அதற்கான பதிலீடொன்றாக உள்ளதான உள்ளூர் உற்பத்திப்பொருள் எனப் பொருள்படும்;

"உள்ளூர்க்கைத்தொழில்" என்பது, நுண்ணாய்வு செய்யப்படும் உற்பத்திப்பொருளைப்போன்ற அல்லது நேரடியாகப் போட்டி நிலைமையிலுள்ள உற்பத்திப்பொருட்களை மொத்தத்தில் உற்பத்தி செய்பவர்களும் இலங்கை ஆள்புலத் தில் தொழிற்படுபவர்களுமான உற்பத்தியாளர்கள் அல்லது இலங்கை ஆள்புலத்தில் தொழிற்படும் எந்த உற்பத்தி யாளர்களின் கூட்டு உற்பத்தி அதேபோன்ற அல்லது நேரடிப் போட்டி நிலைமையிலுள்ள அந்த உற்பத்திப் பொருட்களின் மொத்த உள்ளூர் உற்பத்தியின் பாரிய விகிதாசாரமாக அமைகின்ற அந்த உற்பத்தியாளர்கள் என்று பொருளாகும்;

"அதிகரித்த அளவு" என்பது, உள்ளூர் உற்பத்திக்கு முற்றான நியதிகளாகவோ அல்லது தொடர்புபடுவதாகவோ உள்ள இறக்குமதியின் அதிகரிப்பை உள்ளடக்கும்;

"அக்கறைகொண்ட திறத்தவர்கள்" என்பது;

(அ) நுண்ணாய்வுசெய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் ஏற்றுமதியாளர் அல்லது வெளிநாட்டு உற்பத்தியாளர் ஒருவர்;

(ஆ) நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் இறக்குமதியாளர் ஒருவர்;

(இ) எந்த வியாபார அல்லது தொழில் கழகங்களின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் உற்பத்தியாளர்களாக, ஏற்றுமதியாளர்களாக அல்லது இறக்குமதியாளர்களாக உள்ளனரோ அந்த வியாபார அல்லது தொழில் கழகங்கள்;

(ஈ) ஏற்றுமதிசெய்யும் நாடொன்றின் அல்லது நாடுகளின் அரசாங்கம்;

(உ) அதேபோன்ற அல்லது நேரடிப் போட்டி நிலைமையிலுள்ள உள்ளூர் உற்பத்திப்பொருட்களை இலங்கையிலுள்ள உற்பத்தியாளர்;

(ஊ) எந்த வியாபார மற்றும் தொழிற்கழகங்களின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் இலங்கையில் அதேபோன்ற அல்லது நேரடிப் போட்டி நிலைமையிலுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியாளர்களாக உள்ளனரோ அந்த வியாபார மற்றும் தொழிற்கழகங்கள்;

(எ) உள்ளூர் கைத்தொழிலிலுள்ள வேலையாட்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள் அல்லது வேறு ஒழுங்கமைப்புகள்;

(ஏ) பயன்பாட்டாளர்கள் கழகங்கள்;

(ஐ) நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் கைத்தொழிற் பயன்பாட்டாளர்கள்; அத்துடன்

(ஒ) நுண்ணாய்வொன்றின் விளைவில் போதியளவு அக்கறையொன்றைக் கொண்டுள்ளவராக பணிப்பாளர் தலைமயதிபதியால் தீர்மானிக்கப்பட்டவரான வேறு எவரேனும் இயற்கை அல்லது சட்ட ஆள்,

என்று பொருள்படும்;

"நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருள்" என்பது, தொடக்க அறிவித்தலில் விவரிக்கப்பட்டவாறு இச்சட்டத்திகீழ் முற்பாதுகாப்பு நுண்ணாய்வொன்றிற்கமைய இறக்குமதி செய்யப்பட்ட ஒரு பொருள் என்று பொருள்படும்.

"அது போன்ற உற்பத்திப்பொருட்கள்" என்பது, நுண்ணாய்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள உற்பத்திப்பொருளுக்கு எல்லா அம்சங்களிலும் அதையொத்ததாக அல்லது ஒரேமாதிரியான உற்பத்திப்பொருட்கள் அல்லது, அத்தகைய உற்பத்திப் பொருட்கள் இல்லாதவிடத்தில், எல்லா அம்சங்களிலும் ஒரேமாதிரியாக இல்லாத போதும், நுண்ணாய்வின்கீழான உற்பத்திப் பொருளை நெருக்கமாக ஒத்திருக்கின்ற அதே பௌதீக, தொழில்நுட்ப அல்லது இரசாயன பண்புகளைக் கொண்ட வேறொரு உற்பத்திப்பொருள் எனப் பொருளாகும்;

"உறுப்பினர்" என்பது, உலக வர்த்தக ஒழுங்கமைப்பின் உறுப்பினர் என்று பொருள்படும்;

"பங்குபற்றும் அக்கறைகொண்ட திறத்தவர்கள்" என்பது, இச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நுண்ணாய்வொன்றில் பங்குபற்றுவதில் தங்கள் அக்கறையைக் காண்பித்துள்ள அக்கறைகொண்ட திறத்தவர்கள் என்று பொருள்படும்;

"பாரதூரமான ஊறு" என்பது, உள்ளூர்க் கைத்தொழிலின் நிலைமையில் குறிப்பிடத்தக்களவு பொதுப்படையான சேதம் என்று பொருள்படும்; அத்துடன்

"பாரதூரமான ஊறுக்கான அச்சுறுத்துதல்" என்பது, துல்லியமான உடனேயே நிகழக்கூடிய பாரதூரமான ஒரு ஊறு என்று பொருளாகும்.

**42**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.